மாலை முரசு

பக்கங்கள் 16+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி09 ஞாயிற்றுக்கிழமை 23.03.2025 | அதிர்வு 232

## வடமராட்சி கிழக்கில் சிக்கிய கேரள கஞ்சா



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஒரு தொகை கேரள கஞ்சா போதைப்பொருள் கைப் பற்றப்பட்டுள்ளது. 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# தையிட்டி விகாரையில் சட்டவிரோதக் கட்டடம்

## எதிர்த்து மக்கள் இன்று பெரும் போராட்டம் கைவிலங்குடன் வந்து மிரட்டிய பொலிஸார்

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித் திருந்த தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் இராணுவத்தின் முழு முயற் சியுடன் அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடம் இன்று காலை திறந்து வைக்கப் பட்டது. இதற்குத் எதிர்ப்பு தெரிவித்து தையிட்டி காணி உரிமையாளர்கள், அர சியல் தரப்புக்கள், பொதுமக்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். 02






### இந்தியாவில் தங்கியுள்ள

## ஈழ அகதிகள் நாட்டுக்கு மீளத் திரும்ப வேண்டும்

### வடக்கு ஆளுநர் கோரிக்கை



"இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் இலங் கைக்குத் திரும்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு நாடு திரும்புவர்களுக்கான உதவி 04

## டீசலை சோடா என அருந்திய குழந்தை பரிதாப உயிரிழப்பு

### யாழில் துயரம்

யாழ்ப்பாணத்தில் டீசலை சோடா என அருந்திய ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. ஊர்காவற்றுறை, 03






















## தையிட்டி..

இதன்போது பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு கைவிலங்குகளுடன் வந்திருந்த பொலிஸார், போராட்டக்காரர்களைக் கைது செய்வோம் என்று மிரட்டினர்.

திஸ்ஸ விகாரைப் பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சினை நிவர்த்தி செய்யப்படும் என்று பௌத்தசாசன அமைச்சர் சுனில் செனவி அறிவித்திருந்த நிலையில், அங்கு சட்டவிரோதக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் மிக இரகசியமான வகையில் வேறு சில சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வந்தன. இராணுவத்தினர் இந்தப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

இது தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியான நிலையில் அதற்கு யாழ். மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் மறுப்புத் தெரிவித்திருந்தார். தான் சம்பவ இடத்தைப் பார்வையிட்டார் என்றும், அவ்வாறான சட்டவிரோதக் கட்டடங்கள் எவையும் இல்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

ஆனால், இராணுவத்தால் அமைக்கப்பட்டு வந்த அந்த சட்டவிரோத பௌத்த ஆக்கிரமிப்புக் கட்டடங்களே இன்று மத வழிபாடுகளுக்குப் பின்னர் கையளிக்கப்பட்டன. அந்தக் கட்டடங்கள் பிக்குகள் தங்குவதற்கான மடாலயமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரையில் தொடர்ச்சியாகக் கட்டடங்கள் அமைக்கப்படுவது தேசிய மக்கள் சக்தி அரசின் கையாலாகாத தன்மையை வெளிப்படுத்துவதாகப் பலரும் விமர்சித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தையே தடுத்து நிறுத்துவதற்குத் திராணியற்ற இந்த அரசு, எவ்வாறு திஸ்ஸ விகாரையை அப்புறப்படுத்தி, மக்களின் காணிகளை மக்களுக்கு உரியதாக்கும் என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன.




# கிழக்கு மாகாண சபையை கைப்பற்றுவதே எம் இலக்கு

## பிள்ளையானுடன் இணைந்த கருணா அம்மான் சூளுரை

"போலித் தேசியவாதிகள் எமது மக்களைத் தவறாக வழிநடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதுதான் எமது பிரதான இலக்காகும்."

– இவ்வாறு கருணா அம்மான் என்ற ழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

பிள்ளையானால் உருவாக்கப்பட்ட கிழக்கு தமிழர் கூட்டமைப்பில் கருணா அம்மான் இணையும் நிகழ்வு மட்டக் களப்பு றிவோரா ஹோட்டலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் ஆயுத ரீதியான போராட்டத் திலிருந்து எதற்காக ஜனநாக வழிக் குத் திரும்பினோமோ அந்த இலக்கை அடைவதற்காவே மீண்டும் இணைந்திருக்கின்றோம்.

வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்து விட்டார்கள். அவர்களைத் தமிழ் மக்கள் எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் போலித் தேசியவாதக ளுக்கு இடமளிக்க முடியாது. அவர்களை அகற்ற வேண்டும். அவர்களின் செயற் பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்தவகையில் கிழக்கு மாகாண மக்கள் பல விடயங்களில் தெளிவுற வேண்டியுள்ளது. அதற்காக எமது பயணம் தொடர வேண்டும்.

நாம் வரலாற்றை மாற்றியமைத் தவர்கள். ஆகவே, எம் முன்னிலையில் வந்து நின்று தேசியம் பேசுவதற்கு எவருக்கும் அருகதையில்லை." – என்றார்.

---

**டீசலை..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாரந்தனை பகுதியைச் சேர்ந்த சதீஸ் சஞ்ஜித் என்ற ஒன்றரை வயது ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தையின் வீட்டில் கடந்த 18ஆம் திகதி சிறிய ரக உழவு இயந்திரத் திருத்த வேலைகள் இடம்பெற்றபோது, சோடா போத்தல் ஒன்றில் டீசலைக் குழந்தையின் தந்தை வைத்துள்ளார்.

அதனை வீட்டில் இருந்த குழந்தை சோடா எனக் கருதி அருந்தியுள்ளது.

இதனை அவதானித்தவர்கள் குழந் தையை உடனடியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதித்த நிலை யில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அந்தக் குழந்தை மாற்றப் பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

**வடமராட்சி..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி, மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆழியவளை பகுதியி லேயே குறித்த போதைப்பொருள் நேற்று இரவு கைப்பற்றப்பட்டுள்ளது.

கடல் வழியாகக் கொண்டுவரப்பட்ட 85 கிலோகிராமுக்கும் அதிகமான கேரள கஞ்சா போதைப்பொருள், இராணுவப் புலனாய்வுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையின்போது கைப்பற்றப் பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மருதங்கேணி பொலிஸாரிடம் கையளிக் கப்பட்டுள்ள நிலையில், அவை நீதிமன் றத்திடம் பாரப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசார ணைகள் மருதங்கேணி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
















# ஈழ அகதிகள் நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வழங்குவதுடன், ஈழ அகதிகள் நாடு திரும்புவது தொடர்பில் இலங்கை மற்றும் இந்திய அரசுகள் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கும் உரிய தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைக்கப்படும்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஒபர் சிலோன் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இது ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழ அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர வேண்டும் எனப் போர் முடிந்ததிலிருந்து சொல்லப்பட்டு வருகின்றது என்பதையும், அவர்கள் மீண்டும் இங்கு வர வேண்டும் என்பதே இங்குள்ள எல்லோரது விருப்பம் என்பதையும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்த ஒவ்வொருவர் தொடர்பான விவரங்களையும் பெற்று அவர்களுக்கு எத்தகைய தேவைப்பாடுகள் இன்னமும் இருக்கின்றன என்பதை அறிந்து அதனை உடனடியாக பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் செல்வி சின்னதம்பி சூரியகுமாரி, தமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும், எதிர்பார்ப்பு தொடர்பிலும் விவரித்தார்.

இலங்கையிலிருந்து 4 கட்டங்களாக இந்தியாவுக்கு 3 இலட்சத்து 34 ஆயிரத்து 797 பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும், தற்போது தமிழகத்தில் 103 முகாம்களில் 58 ஆயிரத்து 104 பேர் இருக்கின்றனர் என்ற தரவுகளையும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் தெரியப்படுத்தினர்.

தற்போது தமிழகத்தில் முகாம்களிலுள்ள 58 ஆயிரத்து 104 பேரில், 50 ஆயிரத்து 620 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரை வடக்கு மாகாணத்துக்கு 14 ஆயிரத்து 531 பேர் வருகை தந்துள்ளனர் என்றும் ஆளுநருக்கு அவர்கள் சுட்டிக்காட்டினர்.

தமிழகத்தில் தங்கியுள்ளவர்கள் நாடு திரும்புவதற்கு நிலையான கட்டமைப்பு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும், இலங்கை, இந்திய அரசுக்ல இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை தேவை என்றும், இலங்கையில் அரசியல் உறுதிபாடு அவசியம் என்றும் ஒபர் சிலோன் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

மேலும் தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளுக்கு இலங்கை மற்றும் வடக்கு மாகாணம் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அல்லது போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றமையும் அவர்கள் நாடு திரும்புவதற்குச் சவாலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் நாடு திரும்பிய ஈழ அகதிகள் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும், இலங்கைக்கு நாடு திரும்புவர்கள் இங்கிருந்து சென்றவர்களின் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையினர் என்பதால், இலங்கையில் அவர்களது பூர்வீக பிரதேசத்தை அடையாளம் காண்பதிலும், அவர்களின் காணிகளைக் கண்டறிவதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்ற விடயமும் ஆளுநரின் கவனத்துக்கு ஒபர் சிலோன் நிறுவனத்தால் கொண்டு வரப்பட்டது.

கொள்கை ரீதியான ஆவணம் ஒன்றை ஒபர் சிலோன் நிறுவனம் தயாரித்து வழங்கிய பின்னர் அதனை அடிப்படையாக வைத்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

நாடு திரும்ப விருப்பமானவர்களின் பட்டியலை ஒபர் சிலோன் நிறுவனம், வடக்கின் 5 மாவட்ட செயலர்களுக்கு வழங்கிய பின்னர் அவர்களுக்கான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மாவட்ட செயலர்கள் மேற்கொள்வார்கள் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளில் பலர் தாதியர் கற்கை நெறியை முடித்தவர்கள் எனவும், விளையாட்டுத்துறையில் சாதித்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டிய ஒபர் சிலோன் நிறுவனத்தினர், வடக்கு மாகாணத்தின் சொத்தான அவர்களை இழக்கக் கூடாது எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

தமிழகத்திலிருப்பவர்களை வலுக்கட்டாயமாக நாட்டுக்கு அழைத்து வர முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வரவுள்ளவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடுமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஒபர் சிலோன் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், மேலதிக மாவட்ட செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# ஓட்டோ – ஹண்டர் விபத்து மூன்று பேர் படுகாயம்!

(உடப்பு மகாதேவன்)

நாத்தாண்டிய தங்கொட்டுவ வீதி – தங்கொட்டுவ மாவத்தகம பிரதான சந்தியில் ஓட்டோ மற்றும் ஹண்டர் வாகனங்கள் மோதியதில் ஓட்டோ பலத்த சேதத்துக்குள்ளாது.

அதில் பயணித்தவர்கள் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர் என்று நாத்தாண்டிய பொலிஸ ார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்றது.

விபத்து சம்பந்தமான மேலதிக விசார ணைகளை நாத்தாண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# வேட்புமனுக்கு எதிரான ஆட்சேபனை நிராகரிப்பு!

(அபு அலா )

நாபீர் பௌண்டேஷனின் வருகையால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளுக்குள் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், அம்பாறை மாவட்ட முதலாம் இலக்க சுயேட்சை குழுவில் மாம்பழச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எம்.எல்.துல்கர் நயீம் தெரிவித்தார்.

இது தொடர்பில் இன்று (23) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாபீர் பௌண்டேஷன் தனது உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை தாக்கல் செய்த



போது எங்களுக்கெதிராக 4 ஆட்சேபனைகளை முன்வைத்தார்கள்.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூரால் 2 ஆட்சேபனைகளும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஐ.எல். மாஹிரால் 2 ஆட்சேபனைகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த இரு கட்சியைச் சார்ந்தவர்களால் முன்வைக்கப்பட்ட குறித்த ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக சம்மாந்துறை மக்களை பல வருடங்களாக ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப்பெற்று அரசியல் செய்த சம்மாந்துறையைச் சேர்ந்த அரசியல் பிரபலங்கள் நாபீர் பௌண்டேஷனின் அரசியல் வருகையைக் கண்டு அஞ்சிய நிலையில் காணப்படுகின்றதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபையை நாபீர் பௌண்டேஷனின் சுயேட்சை குழுவான மாம்பழ சின்னம் கைப்பற்றுமளவில் மக்களின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.- என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## குட்டித் தேர்தலின் முக்கியத்துவம்

ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறு மாதங்கள் கழித்துள்ள நிலையில் நாடு தேசிய ரீதியில் ஒரு குட்டித் தேர்தலை எதிர்கொள்ள இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் வழமைக்கு மாறாக இரண்டாவது சுற்றிலேயே வெல்ல முடிந்த அநுர குமார திஸநாயக்க, பொது தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத மிகப்பெரிய வெற்றியை ஈட்டி, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவோடு அதிகாரத்துக்கு வரும் நிலையைப் பெற்றார்.

தமது இந்த ஆறு மாத கால ஆட்சியில், அதற்கு முன்னர் தாம் வாக்குறுதி அளித்த பெரும்பாலான விடயங்களை முன்னெடுக்க முடியாதவராக - செயலில் நிகழ்த்திக் காட்ட வக்கற்றவராக - தடுமாறி நிற்கிறார் புதிய ஜனாதிபதி.

ஆயினும், நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் அவரது கட்சிக்கு கணிசமான வெற்றி காத்திருக்கின்றது என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை இதற்கு முன்னர் வரை ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி இந்த உள்ளூராட்சி தேர்தலில் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் என்று கூறப்படுகின்றது. அதற்கு முன்னர், கடைசியாக நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியோடு அணி சேர்ந்து இருந்த தினேஷ் குணவர்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியும், மொட்டுக் கட்சியின் அதிருப்தியாளர்கள் குழுவும் இந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியைக் கைவிட்டு விட்டன. அதனால் இத்தேர்தலில் தனி வழி போகும் இக்கட்டில் - நெருக்கடியில் - ஐ.தே.கட்சி உள்ளது.

மொட்டுக் கட்சி கூட ஏற்பட்ட பின்னடைவுகளில் இருந்து இன்னும் தன்னைச் சுதாகரிக்கும் நிலைக்கு கூட மீண்டெழுந்து விடவில்லை.

மற்றொருபிரதானஎதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் குழப்பத்தில் உள்ளது. அதன் தவிசாளர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் அந்தப் பதவியை இராஜினாச் செய்து விட்டு, கட்சியின் சாதாரண உறுப்பினர் பதவியில் மாத்திரம் தொடருகின்றார்.

இந்தப் பின்புலத்தில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி அணி வெற்றி பெறுவது சாத்தியமாகலாம்.

ஆயினும் தற்போதைய உள்ளூராட்சித் தேர்தல் முறைமைகளுக்கு அமைய, பெரும்பாலான சபைகளில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை பெற முடியாத நிலையே காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அதனால் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தில் குழப்பமும், இரண்டு ஆண்டுகளின் பின்னர் தலைமை மாற்றங்களும் தாராளமாக இடம் பெறக்கூடிய சாத்தியமே தெரிகிறது.

இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்க - கணிசமான - வெற்றியை ஆளும் தரப்பு ஈட்டினால் மட்டுமே, அடுத்த ஆண்டிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்த அநுர குமார திஸநாயக்க அரசு முடிவு எடுக்கும் என்று தென்னிலங்கை வட்டாரங்கள் கூறுகின்றன.

அந்த வகையில் இப்போது தேசிய ரீதியில் நடக்கப் போகின்ற குட்டித் தேர்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

# பனைசார் உற்பத்தியாளர் நிதி நெருக்கடியை போக்க பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை

(த.சுபேசன்)

பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடி நிலைமையை போக்குவதற்கு வங்கிகள் ஊடாக அவர்களுக்குக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

பதநீர் உற்பத்தியாளர்கள், கைப் பணியாளர்கள் உள்ளிட்ட பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வரும் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் அண்மையில் வங்கிகளுடன் சந்திப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அதன் முதற்கட்டமாக இலங்கை வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி அதிகாரிகளுடன் தனித்தனியே பனை அபிவிருத்திச்சபை சந்திப்பை ஏற்படுத்தி சாதகமான முடிவையும் பெற்றுள்ளது.

இதன்போது பனைசார் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கிவரும் நிதித் தேவைகளுக்கான கடன் வசதிகளை வழங்க வங்கிகள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்தோடு குறைந்த வட்டி விகிதத்தில் கடனை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இதனூடாக உற்பத்தியாளர்களுடைய நிதி நெருக்கடி நிலைமை தீர்க்கப்படுவதுடன் எதிர்கால தேவை கருதிய அதிக உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நடவடிக்கையை பனை அபிவிருத்திச்சபை முதற்தடவையாக மேற்கொண்டுள்ளது.

இதில் குறிப்பாக பெண் தொழில் முனைவோருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

இத்திட்டம் பனை சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடும் பெண் தொழில் முனைவோருக்கு நிச்சயமாக கைகொடுக்கும்.

பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடனுதவி வழங்கப்படும்.இதன்போது இரண்டு லட்சம் ரூபாவரை கடனுதவிகளை பெற முடியும்.– என்றார்.





# தென்மராட்சியில் மகளிர் தினம்!

(த.சுபேசன்)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் சாவகச்சேரி கலை கலாசார மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பெண்களை வலுவூட்டி – மகிழ்வூட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் வளவாளராக மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சிவசுதன் கலந்து கொண்டிருந்தார். தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# தமிழின இருப்பை அழித்தொழிக்கும் அபிவிருத்தி மாயை தேவையில்லை!

## காரைதீவில் தமிழரசு வேட்பாளர் ஜெயசிறில் காட்டம்

(வி.ரி. சகாதேவராஜா)

எமது தமிழினத்தின் உரிமை மற்றும் இருப்பை அழித்தொழிக்கும் அபிவிருத்தி என்ற மாயை எமக்குத் தேவையில்லை. தமிழ் மக்கள் என்றும் தமிழ்க் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் வேட்பாளரும், காரைதீவு முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்று (22) சனிக்கிழமை காரைதீவில் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெற உள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வீட்டு சின்னத்தில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றது.

அம்பாறையில் உள்ள 7 உள்ளூராட்சி மன்றங்களில் 6 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியின் வேட்பு மனுக்கள் எந்த இடத்திலும் நிராகரிக்கப்படவில்லை.

சபைகளிலும் எமது கட்சி ஆட்சி அமைக்கும். சில சபைகளில் தமிழ் பேசும் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க இருக்கிறோம்.

தேர்தல் வந்தால் அபிவிருத்தி என்றுகூறி பணத்தின் பின்னால் அலையும் கொள்கை இல்லாதவர் நம் மத்தியில் இருக்கிறார்கள்.

அவர்கள் சொந்த ஊரையே காட்டிக் கொடுப்பார்கள். அவர்களுக்கு காரைதீவில் இடமில்லை. காரைதீவு படித்த மண் வீரம் செறிந்த மண். இங்கு தேர்தல் வியாபாரிகளுக்கு இடமில்லை.

காரைதீவில் எமக்கு போதிய ஆசனம் கிடையாது விட்டால் எமது இருப்பு பாதிக்கப்படும். இதற்கு எந்த ஒரு தமிழ் மகனும் துணை போக மாட்டான் .

எனவே தமிழ் மக்கள் அனைவரும் தாய்க் கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்.

தமிழன் தமிழரசு கட்சியின் பக்கம் சாயாமல் வேறு கட்சியின் பக்கம் எதற்காக சாய்கிறான் என்ற உண்மை இந்த பணம் தான்.

இதனை மக்கள் அறிந்தும் அறியாமல் இருக்கின்றீர்களா என்னவென்பது உண்மைக்கு புறம்பாகவே உள்ளது.

நான் நினைக்கின்றேன் தமிழரசு கட்சியின் பக்கம் சாய்ந்தால் பணம் கிடைக்காது. அதன் அடிப்படையில் மாற்றுக் கட்சியின் பக்கம் சாய்ந்தால் நிறைய பணம் கிடைக்கும் என்பதற்காக மக்களை ஏமாற்றும் கூட்டம் ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கின்றது .

நீங்கள் உதாரணமாகச் சிந்தித்துப் பாருங்கள் நடந்து முடிந்த அனைத்துத் தேர்தல்களிலும் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கட்சியின் பின்னால் முக்கியமான பெரும் தலைகள் கூட்டம் மக்களின் மண்டையை கழுவி ஏமாற்றுகிறார்கள்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 88 வாக்குகளை எமது தமிழ் மக்கள் அளிக்காவிட்டிருந்தால் எமக்கு ஆசனமே இல்லை. அந்த நிலைமை உள்ளாட்சி சபையில் கடைசி வரைக்கும் வராது. இவர் தமிழ் மக்கள் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அந்த வகையில் தமிழரசுக் கட்சி எந்தப் பணத்துக்காகவும் எவர் பக்கமும் சாயவில்லை. தமிழ் இனத்தின் விடிவுக்காக கொள்கை மாறாமல் திடமாக நிற்கின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களாகிய நாங்கள் எப்பயாவது ஒரு கணம் ஆலோசித்து பார்த்ததுண்டா?

தேர்தல் முடிந்தால் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியையும் முடிந்துவிட்டது. பாமர மக்களை ஏமாற்றும் மாற்றுக் கட்சிக்கு துணை போகும் ஆதரவாளர்கள் பணத் தொகையை பெற்றுக்கொண்டு காலாகாலம் தொட்டு ஏமாற்றி வருகின்றார்கள். இதில் பல குற்றச்சாட்டுகள் தமிழரசு கட்சியின் மீது வைக்கின்றார்கள். செய்த தவறுகள் அனைத்தும் அவர்களே.

எனவே தேசிய சிங்கள கட்சிகளுக்கு எந்த விதத்திலும் நம் மக்கள் வாக்களிக்கப் போவதில்லை என்பதை உள்ளூராட்சி சபையிலே காட்ட வேண்டும் . வடக்கு கிழக்கில் அனைத்து தமிழ் சபைகளையும் தமிழரசுக் கட்சியே ஆட்சி அமைக்கும். இது நம்பிக்கை.- என்றார்.





# 45 சிறுவர் கழகங்களுக்கிடையில் எல்லே சுற்றில் மாங்காடு வெற்றி!

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரதேச சிறுவர் சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சிறுவர் கழகங்களுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியானது நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமையில் களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

விளையாட்டின் ஊடாக உள விருத்தி என்ற நோக்குடன் சிறுவர் கழகங்களின் செயற்றினை அதிகரித்தல், விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்திருந்த இந்தப் போட்டியில் கல்லாறு, எருவில், மாங்காடு என 3 வலயங்களாக பிரிக்கப்பட்டு 45 சிறுவர் கழகங்கள் பங்கேற்றன.

இறுதிப் போட்டிக்கு மாங்காடு மற்றும் கல்லாறு வலய சிறுவர் கழகங்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில், மாங்காடு வலய சிறுவர் கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், சமூர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், எல்.ஓ.எச்.



நிறுவன பணிப்பாளர் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த சுற்றுப்போட்டிக்கு டுமுர் மற்றும் ஊநுசுஜ அமைப்புக்கள் அனுசரணை வழங்கியதுடன், பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு மற்றும் கிராமமட்டத்திலிருந்து சமுர்த்தி பிரிவு சிறுவர் கழகங்களை வினைத்திறனுடன் பங்கேற்பதற்கான ஒழுங்கமைப்புக்களை செய்திருந்தனர்.

மேலும் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ம. புவிதரன் மற்றும் செ சக்திநாயகம் ஆகியோர் இணைந்து இந்த சுற்றுப்போட்டியை ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# சம்மாந்துறை சபை எங்கள் கைவசம் வந்தவுடன் உடனடியாக இரு விடயங்கள் அமுல்படுத்தப்படும்!

## மாம்பழச் சின்ன சுயேச்சை குழு தலைவர் உதுமான்கண்டு நாபீர்

(அபு அலா)

சம்மாந்துறை பிரதேச மக்களுக்கு நன்மையான விடயங்களை முன்னெடுக்க பல திட்டங்களை திட்டமிட்டுள்ளோம். அதனை அமுல்படுத்துவதாக இருந்தால் சம்மாந்துறை பிரதேச சபை எங்கள் கைவசம் வரவேண்டும். அப்போதுதான் எங்களின் திட்டங்களை அமுல்படுத்த முடியும் என்று அம்பாறை மாவட்ட மாம்பழச் சின்ன சுயேட்சை குழு ஒன்றின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



சம்மாந்துறை பிரதேச சபை எங்கள் கைவசம் வந்தவுடன் உடனடியாக இரு விடயங்களை அமலபடுத்தவுள்ளோம். முதலாவது, சம்மாந்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட மாட்டிறைச்சி கடை உரிமையாளர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் கலந்துரையாடி மாட்டிறைச்சி விலையை ஒரு கிலோ கிராம் 1600 ரூபாவுக்கு விற்கக்கூடிய ளவில் அதன் விலையை குறைக்கவுள்ளோம். இதில் மாட்டிறைச்சி உரிமையாளர்களுக்கு எவ்வித நஷ்டங்களும் ஏற்படாதவாறே இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இரண்டாவதாக மக்களுக்கு அத்தியவசியமாகத்தேவைப்படுகின்றபொருள்களின் விலைகளில் 10 சதவீதக் கழிவை வழங்குவதற்கான விசேட திட்டமொன்றையும் அமுல்படுத்தவுள்ளோம்.

இதற்கான முன்னெடுப்புகளை கட்டார், சவூதி அரேபியா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து இத்திட்டத்தை அமல்படுத்துகின்றபோது அரசின் ஆலோசனை மற்றும் அனுமதி போன்ற உதவிகளைப்பெற்று எமது சம்மாந்துறை பிரதேச மக்களுக்கான விடயங்களை செய்யவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.



# உழவு இயந்திர கலப்பையில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

(பாறுக் ஷிஹான்)

வயலில் உழுது கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்து சுழல் கலப்பையில் சிக்கிய இளைஞன் உயிரிழந்துள்ள சம்பவம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அகத்திக்குளம் பிரதேச வயலில் இடம்பெற்றுள்ளது.

நேற்று சனிக்கிழமை (22) இந்தப் பகுதியில் உழுதுகொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி 16 வயது இளைஞன் கலப்பையில் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் கண்ணகி கிராமத்தை சேர்ந்த 16 வயது மதிக்கத்தக்க பெ.ஜீரோசன் என அடையாளம் காணப்பட்டார்.

இந்த இளைஞன் குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதுடன் இரு சகோதரிகளுடன் வாழ்ந்து வருவதுடன் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பாடசாலையில் இருந்து இடைவிலகி பல்வேறு தொழில் புரிந்து வந்துள்ளார்.



இந்த நிலையில் உழவு இயந்திர சாரதியாக வேண்டும் எனும் ஆசையில் நெருங்கிய நண்ரொருவருடன் உழவு இயந்திரத்தில் பயிற்சி எடுத்து வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அத்துடன் உழவு இயந்திரத்தின் சாரதியான உயிரிழந்தவரின் நண்பன் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ள நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் இப்தாரும் கௌரவிப்பு நிகழ்வுகளும்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

2025 ஆண்டுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வு சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம் இப்தாராக இடம்பெற்ற இந்த நிகழ்வில் நோன்பின் மாண்புகளைப் பற்றி சிங்களத்தில் அல்ஹாஜ் மௌலவி சஹ்றான் ஹஸன் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இதன்போது, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவ, 39 வருட சேவையைப் பாராட்டியும், எதிர்வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி பிரிவிடை நிகழ்வை முன்னிட்டும் நினைவுச் சின்னம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா,சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்,சம்மாந்துறை பொலிஸ் நிலைய உபதேச குழுவின் தவிசாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் ஆகியோரினால் கௌரவிக்கப்பட்டார்.

மேலும், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் அவர்களுக்கு டேலன்ட் பிளஸ் டிவியின் ஆலோசகரால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவ பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னுஅசார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி லாபீர் சட்டமுதுமானி எம்.ஏ.எம். லாபீர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.




எம். றசாட், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி விஹாரி ராஜகுரு, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பிரதம இலிகிதர் பிரபாகர், பொலனறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், சம்மாந்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உபதேச குழுவின் தவிசாளர் ஏ.ஜே. காமில் இம்டாட், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். மகேந்திர குமார், கல்முனை, பெரியநீலாவணை, சவளக்கடை, நிந்தவூர், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், சர்வ மதத்தலைவர்கள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள் கலந்து கொண்டனர்.







# இளைஞர்களுக்கான வேலைகளை போதையை ஒழித்து முன்னெடுப்போம்

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருளை ஒழித்து இளைஞர்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக காரைதீவு பிரதேச சபைக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடுகிறது என்று அக்கட்சியின் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் அலுவலகத்தில் 2025 ஆண்டுக்கான காரைதீவு பிரதேச சபைக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் மற்றும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அகுவர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இதன் பின்னர் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் அங்கு அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பானது கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ கொட்டிகாவத்தைபுத்தளம்மாவட்டத்தில்கல்பிட்டி ஆனடுவ ஆராய்ச்சிகட்டு பகுதிகளிலும் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளியிலும் அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பகுதியிலும் போட்டியிடுகின்றது.இத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எமது இளைஞர்கள் இறக்கியுள்ளனர்.

இதனூடாக காரைதீவு பிரதேசசபையில் அதிகளவான ஆசனத்தை ஐக்கிய சமாதான கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளும்.ஊழலற்ற ஆட்சி ஒன்றினை எமது கட்சி மேற்கொள்ளும்.இந்த பிரதேசசபையின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மாற்றம் என்பது எங்களை ஏமாற்றிவிடக் கூடாது. ஒரு மாற்றத்தில் வருகின்றவர்களின் பின்புலம் பலமானதாக இருக்க வேண்டும். இத்தேர்தலில் ஊழலற்ற ஏமாற்றத்துக்கு எதிரான செயற்பாட்டைச் சரியாகச் செய்யக் கூடிய பொதுச் சேவைகளை செய்யும் இளைஞர்கள் முன்வந்து போட்டியிடுகின்றனர்.

எதிர்காலத்தில் மாளிகைக்காடு மாவடிப்பள்ளி உள்ளிட்ட காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மக்கள் நலன் கருதி பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இரு சமூகம் சார்ந்த பிரதேச சபையாக காரைதீவு பிரதேச சபை இருப்பதால் எமது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சி ஊடாக ஐக்கிய சமாதானத்தை ஏற்படுத்தி பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன் போதைப்பொருளை ஒழித்து இளைஞர்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம்.- என்றார்.

# தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நடவடிக்கை

( முஹம்மது ஜிப்ரான்)

வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சட்டத்தரணி மர்சூமமௌலானா தெரிவித்துள்ளார்.

தேசிய காங்கிரஸ் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்களை அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தாக்கல் செய்திருந்தது.

அம்பாறையில் நான்கு சபைகளில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருந்தாலும்,திருகோணமலையில் ஆறு சபைகளிலும் தேசிய காங்கிரஸின் வேட்பு மனுக்கள் ஏற்றுகொள்கை பரப்புச் செயலாளர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா தெரிவித்தார்.



மேலும், ஏறாவூர் நகரசபை மற்றும் அக்கரைப்பற்று, சம்மாந்துறை பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று மாநகர சபை உட்பட ஏனைய மூன்று சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருந்தாலும் அதற்கெதிரான சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான பணிகளை கட்சி மிக தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

எனவே, தீயசக்திகளின் பொய்ப் பிரசாரங்களை முறியடித்து தேசிய காங்கிரஸின் ஆதரவாளர்கள் இது தொடர்பில் தெளிவாக இருக்குமாறு கட்சியின் தலைமை வேண்டி நிற்கிறது.

தீயசக்திகள் எத்தனை மாயவலைகளை பின்னினாலும் அவற்றை முறியடிக்கும் என்பதை நாம் பலமுறை நிரூபித்து இருக்கின்றோம், அற்ப சலுகைகளுக்காக தே.காவின் தலைமை ஒரு போதும் சோரம் போனதாக வரலாறு ஏதும் இல்லை என்று சட்டத்தரணி மர்சூம் மௌலானா மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹரியானா துப்பாக்கிச்சூட்டில் அர்ச்சகர் உட்பட 25 பேர் காயம்



இந்தியாவின் ஹரியானாவில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந் துள்ளனர்.

உத்தர பிரதேசம் பிரயாக்ராஜை சேர்ந்த சுவாமி ஹறி ஓம் தாஸ், ஹறியா னாவின் குருஷேத்ராவில் கடந்த 18 ஆம் திகதி சிறப்பு யாகத்தை தொடங்கினார். இதில் 1,008 அர்ச்சகர்கள் பங்கேற்று யாகம் நடத்தினர். அவர்களுக்கு தரம் குறைந்த உணவு வகைகள் வழங்கப் பட்டன என கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அர்ச்சகர்களுக்கும், சுவாமி ஹறி ஓம் தாஸின் பாதுகாவலர் களுக்கும் இடையே நேற்று காலை மோதல் ஏற்பட்டது. அப்போது சுமார் 70 அர்ச்சகர்களை, பாதுகாவலர்கள் அடித்து விரட்டியதாகக் கூறப்படுகிறது.

ஆத்திரமடைந்த அர்ச்சகர்கள் யாகம் நடைபெற்ற பகுதியில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு அமைக்கப்பட்டிருந்த பந்தல்கள், கொடிக் கம்பங்கள் சேதப்படுத்தப்பட்டன. சம்பவ இடத்துக்கு பொலிஸார் விரைந்து வந்த னர். லேசான தடியடி நடத்தி போராட்டத் தில் ஈடுபட்ட அர்ச்சகர்களை, பொலி ஸார் அப்புறப்படுத்தினர்.

இதற்கிடையில் சுவாமி ஹறி ஓம் தாஸின் பாதுகாவலர்கள் துப்பாக் கிச்சூடு நடத்தியதாகக் கூறப்படுகிறது. இதில் 25 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அனைவரும் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

# மியன்மாரைச் சேர்ந்த 27 பேரை நாடு கடத்தியது இந்திய அரசு

மணிப்பூரில் இருந்து சட்டவிரோத மாகக் குடியேறிய மியன்மார் நாட்டைச் சேர்ந்த 27 பேரை இந்திய அரசு நாடு கடத்தியுள்ளது.

மணிப்பூரில் சுமார் 2 ஆண்டுகளாக வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின் றன. இந்த கலவரம் தொடர்பாக அண்டை நாடான மியான்மரில் இருந்து சட்ட விரோதமாக குடியேறியவர்கள் மீது குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வருகின் றன.

எனவே சட்ட விரோத குடியேறி களை மாநில அரசு கைது செய்து தடுப் புக்காவல் மையங்களில் சிறை வைத் துள்ளது.

இவ்வாறு சிறைவைக்கப்பட்ட 27 பேரின் தண்டனை காலம் நிறைவடைந் துள்ளது. எனவே அவர்கள் 27 பேரும் நேற்று மியன்மாருக்கு நாடு கடத்தப் பட்டனர்.

இந்தோ – மியான்மர் நட்புறவு வாயில் வழியாக அவர்களை இந்திய அதிகாரி கள் மியான்மார் அதிகாரிகளிடம் ஒப்ப டைத்துள்ளனர்.

# தொகுதி விவகாரத்தில் ஸ்டாலினை கண்டித்து பா.ஜ.கவினர் கறுப்பு கொடி ஆர்ப்பாட்டம்



நாடாளுமன்ற தொகுதி மறுவரை யறை தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் கூட்டிய கலந்தாய்வு கூட்டத்தை கண்டித்து தமிழகம் முழுவதும் பா.ஜ.க. நிர்வாகி கள் தங்களது வீட்டு வாசலில் நின்றபடி கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நதிநீர் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினை யில் போதிய கவனம் செலுத்தாமல், நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை பிரச்சினையை கூறி மக்களை திசை திருப்புவதாக முதல்வர் ஸ்டாலினை கண்டித்து, மாநிலம் முழுவதும் பா.ஜ.க. நிர்வாகிகள் தங்களது வீட்டு வாசலில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்து வார்கள் என அறிவித்திருந்தது.

அந்த வகையில் பா.ஜ.க. தலை வர்கள், தொண்டர்கள் என அனைவரும் கறுப்புச் சட்டை அணிந்து தி.மு.க. அரசுக்கு எதிராக தங்களது வீடு முன்பு கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்பகுதியாக சென்னை பனை யூரில் உள்ள தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வீட்டில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது. பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

“முல்லை பெரியாறு, செண்பக வல்லி, மேகேதாட்டு அணைகள் பிரச்சினை காரணமாக லட்சக்கணக் கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள னர். அணை விவகாரத்தில் மத்திய அரசுக்கு எந்த பொறுப்பும் இல்லை. அதேநேரம் கேரளா, தமிழகம் அனு மதியின்றி மேகேதாட்டு அணை கட்ட முடியாது என மத்திய அரசு தெளிவாக கூறிவிட்டது. ஆனால் கர்நாடக துணை முதல்வரோ தமிழகத்தின் அனுமதி யில்லாவிட்டாலும் அணை கட்டு வோம் என்றார். இதற்கு எதிராக தமிழக முதல்வர் இதுவரை ஒரு கேள்வி கூட கேட்கவில்லை. கேரள எல்லையில் மருத்துவ, மனிதக் கழிவுகளை கொட்டு கின்றனர். செண்பகவல்லி அணை உள்ளிட்ட தமிழக பிரச்சினையை ஒரு முறை கூட முதல்வர் பேசவில்லை.

இவ்வாறு அண்டை மாநிலங்களுட னான பிரச்சினையில் தமிழகத்துக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண் டிய தீர்வு கிடைக்காதவாறு, மாநில உரி மையை முழுவதுமாக முதல்வர் கோட்டை விட்டிருக்கிறார். அரசியல் லாபத்துக்காக மட்டுமே கம்யூனிஸ்ட், காங் கிரஸ் ஆகியவற்றுடன் முதல்வர் தொடர்பில் இருக்கிறார். இருக்கும் பிரச்சினையை மறைத்து பிரச்சி னையே இல்லாத தொகுதி மறுசீரமைப்பு நாடகத்தை ஏமாற்று, பித்தலாட்ட வேலைக் காக அரங்கேற்றுகின்றனர்.

காங்கிரஸ் போல மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு இல்லை என பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழகம் ஒரு தொகுதியை கூட இழக்கப் போவதில்லை.

தமிழகத்தில் படுகொலை நடக்காத நாளும், பாலியல் வன்கொடுமை நடக்காத நகரமோ, ஊழல் இல்லாத அரசுத்துறையே இல்லை. சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்வதை தமிழக அரசு மறுப்பது நியாயமா.

வடஇந்தியர்களை தி.மு.கவினர் அவதூறாக பேசியுள்ளனர். மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி கூட்டத்தை புறக்கணித்துள்ளார். டாஸ்மாக் ஊழல் தமிழக அரசியலை மாற்றும் ஊழலாக இருக்கும். இப்பிரச்சினையை பா.ஜ.க. கையில் எடுத்ததாலேயே டாஸ்மாக் கில் எம்.ஆர்.பி. விலைக்கு மதுபானம் கிடைக்கிறது. 2ஜி வழக்கில் தற்போது வரை விசாரணை தொடர்கிறது. வரும் காலத்தில் திமுகவின் ஊழலின் பரிணா மத்தை பார்க்கப் போகிறோம்.” என் றார்.

இதேபோல் பா.ஜ.க. தலைவர்கள் சாலிகிராமத்தில் தமிழிசை, வேளச்சேரி யில் கரு.நாகராஜன் உள்ளிட்டோரும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

# லெபனான் மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 7 பேர் உயிரிழப்பு; 40 பேர் காயம்!



இஸ்ரேல் லெபனான் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

லெபனானில் உள்ள உட்கட்டமைப்பு தளங்கள் மற்றும் ஆயுதகளஞ்சியசாலை உள்ளிட்ட பகுதிகளில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். குழந்தை உள்ளிட்ட 40 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் போர் நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் இஸ்ரேல் மேற்கொண்ட மிகக் கடுமையான தாக்குதல் இதுவாகுமென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அமெரிக்காவில் 2 குழுக்களிடையே துப்பாக்கிச் சூடு; மூவர் உயிரிழப்பு



அமெரிக்காவின் நியூ மெக்ஸிகோ மாநிலத்தில் லொஸ் க்ரூஸ் நகரில் அனுமதியற்ற மகிழுந்து கண்காட்சியொன்றில் இரண்டு போட்டி குழுக்களுக்கு இடையேயான இடம்பெற்ற பரஸ்பரத் துப்பாக்கிச் சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சம்பவத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் 19 வயதுடைய இரண்டு ஆண்களும் 16 வயது சிறுவன் ஒருவனுமே பலியாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியசாலையிலிருந்து வெளியேறுகிறார் பாப்பரசர்

இத்தாலியின் ரோமில் உள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வரும் பாப்பரசர் பிரான்சிஸ் இன்றைய தினம் சிகிச்சை நிறைவடைந்து அங்கிருந்து வெளியேறவுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வத்திக்கானில் குறைந்தது இரண்டு மாதங்கள் அவர் ஓய்வெடுக்க வேண்டும் எனவும் அவருக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

88 வயதான பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி கடுமையான சுவாச தொற்று காரணமாக இத்தாலியின் ரோமில் உள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த சுவாச தொற்றின் விளைவாக அவருக்கு நியூமோனியா நோய் நிலைமை ஏற்பட்டது.

சுமார் 5 வாரங்களாகச் சிகிச்சை பெற்றுவந்த அவர் ஆபத்தான கட்டத்திலிருந்து விடுபட்டுள்ள நிலையில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறவுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




பக்கங்கள் - 3


கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை | 23/03/2025

## காலாவதியான ஓட்டுநர் உரிமத்துடன் வாகனம் செலுத்துகின்றனர் நூற்றுக்கணக்கான சாரதிகள்



C2 ▶



# கனடா பொதுத் தேர்தலில் பிரதமர் மார்க் கார்னி

# ஒட்டாவா - நெப்பீயன் தொகுதியில் போட்டி

கனடாவில் அடுத்த பொதுத் தேர்தல் ஏப்ரல் 28, திங்கள்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது,

பிரதமர் மார்க் கார்னி, ஒட்டாவா-நெப்பீயன் தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடுவார்.

ஒட்டாவா நகரம் என்பது தனது குடும்பத்துடன் வாழ்ந்த இடம், பொதுச் சேவைக்கு தனது வாழ்க்கையை அர்ப்பணித்த இடம் மற்றும் தனது சமூகத்திற்கு திரும்ப கொடுத்த இடம் என பிரதமர் கார்னி தெரிவித்துள்ளார்.

நெப்பீயன் தொகுதியில் முந்தைய லிபரல் எம்.பி சந்திர ஆர்யாவின் வேட்புமனு லிபரல் கட்சியால் திடீரென நீக்கப்பட்டது.

கட்சி வெளியிட்ட அறிக்கையில், புதிய தகவல்களை பரிசீலனை செய்த பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

பிரதமர் மார்க் கார்னி, நாளைய தினம், ஆளுநர் நாயகம் மேரி சைமனை சந்தித்து நாடாளுமன்றத்தை கலைக்குமாறு கோரவுள்ளார்.

குறைந்தபட்ச தேர்தல் காலம் 37 நாள்கள் என்பதற்கேற்ப, இது சட்டத்தால் அனுமதிக்கப்படும் மிகக் குறைந்த காலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்கூட்டிய வாக்களிப்பு ஈஸ்டர் விடுமுறை காலத்தில் நடைபெற வாய்ப்பு உள்ளது.

# இந்திய வம்சாவளி உறுப்பினர் தேர்தலில் போட்டியிட தடை



கனடாவில், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீண்டும் ஒரு அவமதிப்பை எதிர்கொண்டுள்ளார்.

கனடாவில் பொதுத்தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரா ஆர்யா தேர்தலில் போட்டியிட ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி தடை விதித்துள்ளது.

ஒன்ராறியோவிலுள்ள Nepean தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான ஆர்யாவுக்கு, இம்முறை தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டு முதல் தான் தனது தொகுதி மக்களுக்காக முழுமூச்சுடன் உழைத்துவருவதாக

C2 ▶



# காலாவதியான ஓட்டுநர் உரிமத்துடன் வாகனம் செலுத்துகின்றனர் நூற்றுக்கணக்கான சாரதிகள்

காலாவதியான ஓட்டுநர் உரிமத்துடன் வாகனம் செலுத்துகின்றனர் நூற்றுக்கணக்கான சாரதிகள்

கனடாவின் தினந்தோறும் நூற்றுக்கணக்கான சாரதிகள், காலாவதியான ஓட்டுநர் உரிமத்துடன் வாகனம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர் என ஒட்டாவா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மிகைப்படுத்திக் கூறவில்லை எனவும், ALPR (Automatic License Plate Reader) கேமராக்கள் மூலம் இந்த ஓட்டுநர்களைப் பிடிப்பதாகவும் ஒண்டாரியோ மாகாண காபொலிஸ் அதிகாரி மைக்கேல் பாதி கூறினார்.

பெரும்பாலான ஓட்டுநர்கள் உரிமம் காலாவதியாகி விட்டதை அறிந்து கொள்ளவே இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

2021 நவம்பரில், ஒண்டாரியோ மாகாண அரசு மின்னஞ்சல் / தொலைபேசி அறிவிப்புகளுக்கு மாறி, அச்சில் (Paper Mail) அனுப்பும் உரிம புதுப்பிப்பு அறிவிப்புகளை நிறுத்தியது.

இதன் விளைவாக, பலர் தங்கள் உரிமம் எப்போது காலாவதியாகிறது என்பதையே கவனிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டுநர்கள் அதிக நேரம் செலவிடும் விஷயம், எரிபொருள் விலை, வாகன பராமரிப்பு போன்றவையே. ஆனால், உரிமத்தின் காலாவதி திகதி பார்ப்பதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# விடுமுறையைக் கொண்டாடச் சென்ற கனடா பெண் ஒருவர் மீது தாக்குதல்

கியூபாவில் விடுமுறையை கழிக்கச் சென்ற போது ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண், தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

கனேடிய ஆணொருவர் ஒரு கியூபா ரிசார்ட்டில் தன்னை முகத்தில் குத்திய சம்பவம் தொடர்பில் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

கியூபாவில் விடுமுறையில் இருக்கும் போது முகத்தில் தாக்கப்பட்டதாகவும்



இந்தக் காயம் இன்னமும் பூரணமாக குணமாகவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**இந்திய வம்சாவளி...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

தெரிவித்துள்ள ஆர்யா, இந்த செய்தி தனக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே லிபரல் கட்சித் தலைமைக்காக போட்டியிட முயன்றபோதும் ஆர்யாவுக்கு லிபரல் கட்சி அனுமதி மறுத்துவிட்டது நினைவிருக்கலாம்.

காலிஸ்தான் அமைப்புக்கு எதிராக குரல் கொடுத்துவருபவரான ஆர்யாவுக்கு, அதன் காரணமாக கனடாவில் எதிர்ப்பு நிலவுவது குறிப்பிடத்தக்கது.




# நாட்டுக்காக அளப்பரிய சேவை செய்த கனடியருக்கு லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு

நாட்டுக்காக அளப்பரிய சேவைகளை செய்த கனடியர் ஒருவருக்கு லொத்தர் சீட்டிழுப்பில் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஒன்டாரியோ லாட்டரி மற்றும் கேமிங் கார்ப்பரேஷன் (OLG) தனது வரலாற்றில் முதல் முறையாக, ஒரு Order of Canada விருது பெற்ற நபர் ஒன்டாரியோவில் ஒரு முக்கியமான லொத்தர் சீட்டிலுப்பில் பரிசு சென்றுள்ளார் என அறிவித்துள்ளது.

ஒர்டர் ஒப் கனடா என்ற விருது நாட்டுக்காக அளப்பரிய சேவை செய்வோருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதி உயர் விருதுகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முடுபு டொரொண்டோ நகரைச் சேர்ந்த சார்லஸ் "சார்லி" காஃபி கடந்த ஜனவரி 31 ஆம் திகதி நடைபெற்ற சீட்டிலுப்பில் இவ்வாறு பரிசு வென்றுள்ளார் என அறிவித்துள்ளது.

சார்லி, 25 மில்லியன் டொலர் லாட்டோ மேக்ஸ் ஜேக்பாட்டை வென்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டில் Order of Canada விருது பெற்ற காஃபி, North York-இல் ஒரு எரிபொருள் நிலையத்தில் தனது காருக்கு பெட்ரோல் நிரப்பிக் கொண்டிருந்த போது, ஒரு சாக்லேட் பாரையும் லாட்டரி டிக்கெட்டுகளையும் கொள்வனவு செய்துள்ளார்.

"நான் முதல் முறையாக பார்த்த போது, '25,000 டொலர்' என்று இருக்கலாம் என்று நினைத்தேன், அது சுவாரஸ்யமாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டேன்," என்று OLG வெளியிட்ட வீடியோவில் சார்லி குறிப்பிட்டுள்ளார்.

"தன்னிடம் அப்போது கண்கண்ணாடி இருக்கவில்லை எனவும் பிறகு மீண்டும் பார்த்தபோது, 25 மில்லியன் டொலர் என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டதாகவும் சார்லி தெரிவித்துள்ளார்.



# கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 13 வயது சிறுவன் கைது

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 13 வயதான சிறுவன் ஒருவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மார்க்கம் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற வீடுடைப்பு மற்றும் திருட்டு சம்பவங்களின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டெனிசன் தெரு மற்றும் மிடில்ஃபீல்ட் சாலை பகுதிகளில் உள்ள வீடுகளில் உட்புகுதல் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு வீட்டிற்குள் புகுந்து வாகனச் சாவிகளை திருடியுள்ளனர். பின்னர் கொள்ளையர்கள் அந்த வீட்டின் இரண்டு வாகனங்களை திருடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு நாள்கள் கழித்து, போண்டா சாலை மற்றும் கோல்டன் அவென்யூ பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நுழைந்து மேலும் இரண்டு வாகனங்களை திருடியுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடுகளுக்குள் புகுந்து வாகன சாவிகள் திருடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

திருடப்பட்ட வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட சிறுவனுடன் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேக நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.